27 அக்டோபர் 2024
பொதுக்காலம் ஆண்டின் 30 ஆம் ஞாயிறு

NEW WAY OF BEING CHURCH

# newbec

## மண்ணுலகிற்கு உப்பும் உலகிற்கு ஒளியும்:

ஆன்மீக ஒன்றிப்பில் பங்குகொள்ளும் உணர்வோடு தூதுரைத்தல், கொண்டாடுதல் மற்றும் செவிமடுத்தல் (மத்தேயு 5: 13-16)



மாதாந்திர கருப்பொருள்
ஆயர் மாமன்றத்தை
நோக்கிப் பகிரப்பட்டப் பணி

# நாம் இன்னும் பார்வையற்றவரா?

கடந்த சில ஞாயிற்றுகிழமை வாசகங்கள் இயேசுவின் யெருசலேம் பயணத்தைப் பற்றி விவரிக்கின்றன. இந்தப் பயணத்தின்போது, இயேசு தம்முடைய சீடர்களிடம் தம்முடையப் பாடுகள், மரணம் ஆகியவற்றைப் பற்றி சீடர்களுக்கு முன்னறிவித்தப்படியே செல்கிறார். இருந்தபோதும் இயேசு அவர்களிடம் என்ன சொல்ல முயற்சிக்கிறார் என்பது அவர்களுக்குப் புரியவில்லை. வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால் இயேசு யார் என்றும் அவரது பணியின் உண்மையான நோக்கம் குறித்தும் அவர்கள் இன்னும் பார்வையற்றவர்களாகவே இருந்தனர்.

இவ்வாறு இயேசு தம்முடையப் பயணத்தைத் தொடரும்போது, மாபெரும் கூட்டம் அவரையும் அவருடைய சீடர்களையும் பின் தொடர்கிறது. எரிக்கோவை விட்டு அவர் வெளியேறும்போது, பர்த்திமேயு என்னும் பார்வையற்ற ஒருவரைக் கடந்து செல்கிறார்கள். இயேசு அவ்வழியாக செல்கிறார் என்பதை அறிந்த அவர் இயேசுவை நோக்கி அவர்மீது மனம் இரங்குமாறு கூக்குரலிடுகிறார். அவர் இயேசுவை 'தாவீதின் மகனே" என்னும் மெசியாவின் அடையாளத்தைக்கூறுகிறார். இயேசு வாக்களிக்கப்பட்ட தாவீது அரசரின் வழிவந்தவர், தாவீது அரசக் குலம் என்று இயேசுவை அழைக்கிறார். (2 சாமுவேல்: 7: 12-16)

"தாவீதின் மகனே" என்னும் அடையாளத்தைக் கொண்டு பர்த்திமேயு அழைத்தபோது சிலர் தடுக்கமுயன்றாலும் பார்வையற்றவர் விடாப்பிடியாகக் கூக்குரலிடுகிறார். அவருக்கு இயேசுதான் ரபூனி அதாவது போதகர். இயேசுவின் மீது அவ்வளவு ஆழமான நம்பிக்கை கொண்டிருந்தார். அது தான் இயேசுவின் கவனத்தை ஈர்த்தது. இதன் விளைவாக இயேசுவின் சீடர்கள் பர்த்திமேயுவை இயேசுவின் அருகில் கொண்டுவந்தார்கள்.

அவரை குணப்படுத்துவதற்கு இயேசு பர்த்திமேயுவைத் தொடவில்லை, ஆனால் பர்த்திமேயு இயேசுவின் மீது கொண்டிருந்த ஆழ்ந்த நம்பிக்கை அவரைக் குணமாக்கியது. அவர் பார்வை பெற்றதும், பர்த்திமேயு உடனே இயேசுவைப் பின் தொடர்ந்தார். எனவே பர்த்திமேயு நம்பிக்கையின் முன்மாதிரியாக நமக்குக் காட்டப்படுகிறார். இயேசுவின் மீதுள்ள முழுமையான நம்பிக்கையால் மட்டுமே ஒரு நபர் இயேசுவைப் "பார்க்க" முடியுமென்று அவர் நமக்குக் காட்டுகிறார்.

நாம் எப்படி? இயேசுவை அறிந்திருக்கிறோம் என்று நினைக்கும் சீடர்களைப் போல இருக்கிறோமா? எல்லாவற்றிற்கும் மேலாக நீண்ட காலம் நான் கிறிஸ்துவனாக இருக்கிறேன் என்ற எண்ணம் கொண்டுள்ளோமா? அல்லது நான் "பார்வையற்றவன் தான்" என் வாழ்வில் இயேசு யார் என்று இன்னும் பார்க்கமுடியாமல் இருக்கிறேனா?

இன்றைய நற்செய்தியில் நாம் பார்த்த பர்த்திமேயுவைப் போல எப்போதும் இயேசுவை மீண்டும் மீண்டும், "தாவீதின் மகனே எனக்கு இரங்கும்" என்று முழுமையான நம்பிக்கையோடு தொடர்ந்து அழைக்கவேண்டும். இதனால் அவரை நோக்கி இன்னும் நெருங்கி வரமுடியும். இவ்வாறு செய்யும்போது நம்முடைய கண்களை அவர் திறந்து அவரை உண்மையிலேயே பார்க்க உதவிசெய்யும். இதைச் செய்தால் நாம் அவரின் சீடர்கள், அவரை எல்லா வழிகளிலும் பின்பற்ற தயாராய் இருப்போம்.

ஆயர் மாமன்றம் செவிகொடுக்கும் திருஅவை; கேட்பதைவிட செவிமடுப்பது அதிகம் என்பதை அறிந்துள்ளது. இது ஒரு பரஸ்பர செவிமடுத்தல். ஏனென்றால் இதில் ஒவ்வொருவரும் கற்றுக்கொள்ள ஏதேனும் ஒன்று உண்டு.

**திருத்தந்தை பிரான்சிஸ்**







### இன்றைய இறைவார்த்தை:

எரேமியா 31: 7-9
திபா: 126: 1-6
எபிரேயர்: 5: 1-6
மாற்கு 10: 46-52

INTERNAL CIRCULATION ONLY
BUL 43/2024

**Published by:** Archdiocesan Pastoral Institute (API) | **Email:** api@archkl.org